**செய்தி வெளியீடு எண்: 069** **நாள்: 27.01.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

## மதுரையில் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் (எய்ம்ஸ்) அடிக்கல் நாட்டு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை – 27.1.2019

------

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே!

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு மக்களவை துணைத் தலைவர் திரு.தம்பிதுரை அவர்களே!

மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.பொன். ராதாகிருஷ்ணன் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,

திரு.செல்லூர் ராஜு அவர்களே!

டாக்டர்.விஜயபாஸ்கர் அவர்களே!

திரு.உதயகுமார் அவர்களே!

வருகை தந்துள்ள

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே !
மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே !
வருகை தந்திருக்கின்ற தலைமைச் செயலாளர் அவர்களே!
மற்றும் வருகை தந்துள்ள
மத்திய, மாநிலத்தினுடைய உயர் அதிகாரிகளே!
மருத்துவர்களே!
வருகை தந்துள்ள பெரியோர்களே! தாய்மார்களே!
அத்தனை பேருக்கும் என் முதற்கண் நன்றிகலந்த
வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிற்கு எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க உத்தரவிட்டு, அதற்கு அடிக்கல் நாட்டவும் மற்றும் மத்திய மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன் மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய **3** மருத்துவக் கல்லூரிகளில் தலா **150** கோடி ரூபாய் செலவில் பன்நோக்கு உயர்சிறப்பு மருத்துவ வசதி வழங்கும்

வகையில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைக்கவும் இன்று வருகை புரிந்துள்ள தங்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்து, எனது உரையை தொடங்குகிறேன்.

ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்தவுடன், தமிழ்நாட்டில் இத்தகைய மருத்துவமனை அமைய வேண்டும் என்று இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்களுக்கு கடிதம் எழுதியதோடு, இந்த திட்டத்திற்கு மத்திய அரசு கோரிய விவரங்கள் அனைத்தையும் உடனுக்குடன் வழங்கி, இந்த மருத்துவமனை அமைய வலியுறுத்தி வந்தார்கள். நானும் மத்திய அரசையும், தங்களையும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தேன்.

சுகாதாரச் சேவைகளை மக்களுக்கு வழங்குவதில், இந்தியாவிற்கே தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக விளங்குகிறது. வளர்ந்த நாடுகளுக்கு இணையான சுகாதாரத் தரத்தை தமிழ்நாடு அடைய வேண்டும் என்பது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட தொலைநோக்குத் திட்டம் 2023–இன் குறிக்கோளாகும். தொற்று மற்றும் தொற்றா நோய்களை தடுப்பதிலும், கட்டுப்படுத்துவதிலும், சிகிச்சை அளிப்பதிலும் தமிழ்நாடு முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது. பல்வேறு மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் மருத்துவ நிலையங்கள் மூலமாக நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை சேவைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கி வருகிறது. மகப்பேறு நலத் திட்டங்கள் மற்றும் குழந்தை நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்றாகும்.

இத்தகைய செயல்பாடுகளினால், 'நிதி ஆயோக்' அண்மையில் வெளியிட்டுள்ள "சுகாதாரமான மாநிலம் - முற்போக்கு இந்தியா" அறிக்கையில் மூன்று முன்னிலை மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய அளவில் குழந்தை இறப்பு விகிதம் 34-ஆக உள்ள நிலையில், தமிழ்நாட்டில் 2010-ஆம் ஆண்டு 24-ஆகவும், 2016ல் 17-ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் தாய்மார்கள் பேறுகால இறப்பு விகிதம் தற்போது 130 ஆகும். 2010ஆம் ஆண்டிலேயே தமிழ்நாட்டில் இவ்விகிதம் 90-ஆக இருந்தது. அதுவே, 2014-ஆம் ஆண்டு 66-ஆக குறைந்துள்ளது. தற்போது 2016-17ஆம் ஆண்டைய விவரப்படி, இது மேலும் 62-ஆக குறைந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபை, சுகாதாரம் குறித்து வகுத்துள்ள நிலையான வளர்ச்சி இலக்குகளில் **2030**ஆம் ஆண்டுக்குள் தாய்மார்கள் பேறுகால இறப்பு விகிதத்தை **66–**ஆக குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கினை தமிழ்நாடு **2016**ஆம் ஆண்டிலேயே அடைந்து, மத்திய அரசின் விருதினையும் பெற்றுள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்கு திட்டங்களின் மூலம், மக்களுக்குத் தரமான சுகாதார சேவை கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. குடும்ப நலத் திட்டத்தில் முழுக் கவனம் செலுத்துதல், **1994**ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் தொடங்கியது, ஆரம்ப சுகாதார நிலையங்களில் தாய்சேய் நலச் சேவைகளை **24** மணி நேரமும் வழங்குதல், **30** படுக்கை வசதிகள் கொண்ட ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஒவ்வொரு வட்டாரத்திலும் ஏற்படுத்துதல், போதுமான இரத்த வங்கிகளை ஏற்படுத்துதல், இரவில் பிரசவ அறுவை சிகிச்சை செய்வதற்கு தேவையான வசதிகளை அளித்தல், பச்சிளம் குழந்தைகளை நிலைப்படுத்துதல் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுகளைத் தோற்றுவித்தல், ஒருங்கிணைந்த மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை சிகிச்சைப் பிரிவுகளின் தரத்தை மேம்படுத்துதல், பிரசவ உடனாளர் திட்டத்தை அறிமுகப்படுத்துதல், தாய் இறப்பைத் தணிக்கை செய்தல், நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம், தேசிய சுகாதாரத் திட்டங்கள் அனைத்திலும் குறியீடுகளை அடையப் பெறுதல் போன்ற பல்வேறு முன்னோடித் திட்டங்களை தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுத்தி

வருகிறது.  இதன் காரணமாகத் தான், தமிழ்நாடு சுகாதாரக் குறியீடுகளில் பல சாதனைகளை செய்ய முடிந்தது.

மேற்கண்ட திட்டங்களுடன், மாதவிடாய் கால சுகாதாரத் திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், அரசு கூடுதல் நிதி உதவியுடன் கூடிய டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

2018–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தமிழ்நாட்டின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில், **ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 2 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.**

கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தையின் சுகாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.  இத்திட்டத்தில் வழங்கப்படும் நிதியுதவி 12,000/– ரூபாயிலிருந்து 18,000/– ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 8 ஆண்டுகளில் இத்திட்டத்தில் 51.03 இலட்சம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு 4,651.58 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டங்கள் தவிர, தாய் சேய் நலத்தைப் பேணுவதற்கு, அம்மா குழந்தை நலப்பெட்டகம், அம்மா மகப்பேறு சஞ்சீவி, அம்மா ஆரோக்கியத் திட்டம், அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம், மகளிர் சுகாதாரத் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி, தமிழ்நாடு இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

இறந்தவர்களின் உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சை திட்டத்தை செயல்படுத்துவதில், தமிழ்நாடு எப்பொழுதுமே மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்து வருகிறது.  தேசிய அளவில் மிகச் சிறப்பாக செயல்படும் மாநிலம் என்ற விருதினை கடந்த 4 வருடங்களாக தமிழ்நாடு அரசு தொடர்ந்து பெற்று வருகிறது.

At this juncture, on behalf of Tamil Nadu, I would like to thank Hon'ble Prime Minister for sanctioning AIIMS at Madurai. I would also like to place before you that Ramanathapuram district has

been historically backward and geographically remote with a long coast line. The very famous Rameswaram temple attracts tourist across the country and world, and is located in Ramanathapuram district. This district has been selected by Government of India as an aspirational district. I, therefore, request you to sanction a Government Medical College for this district in the ensuing Union Budget under the Centrally Sponsored Scheme.

தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை **1,264** கோடி ரூபாய் செலவில் அமைக்க அனுமதி அளித்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு, தமிழ்நாடு மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும், மதுரை மாவட்ட மக்களின் சார்பாகவும் நன்றியை மீண்டும் ஒரு முறை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**